ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 353 - 1985 ජූනි 07 වැනි සිකුරාදා - 1985.06.07
353 ஆம் இலக்கம் - 1985 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. - பி. 11/80

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ், உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன், சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

செயலாளர்,
சுகாதார அமைச்சு.

கொழும்பு, 1985, மே 09.

### ஒழுங்குவிதிகள்

1\. இவ்வொழுங்குவிதிகள், 1984 ஆம் ஆண்டின் உணவுச் சட்ட (நானாவிதமானவை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் தத்துவங்களும் கடமைகளும்**

2\. அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர், சட்டத்தின் 14 ஆம் பிரிவினால் அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களுக்கு மேலாக, அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட நிருவாக இடப்பரப்புக்குள் பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும் : -

(1) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் அனுட்டிக்கப்பட்டு, அவற்றோடு இணங்கியொழுகப்படுகின்றதோ என்பது குறித்து தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளல் ;

(2) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளுக்கு முரணான ஏதேனும் தொடர்பில் அவருக்கு எழுத்தில் செய்யப்படும்

1A – CM25880 – (2018/06)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

முறைப்பாடு எதனையும் புலனாய்வு செய்தல் ;

(3) இந்த ஒழுங்கு விதிகளின்கீழான அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் கடமைகளைப் புரிவதிலும் அத்தகைய அலுவலரினால் செய்யப்படும் பரிசோதனைகள் மற்றும் அவரால் எடுக்கப்படும் வேறு நடவடிக்கைகள் எல்லாம் பற்றிய பதிவேடொன்றைப் பேணுதலும், அத்துடன் உணவு அதிகாரியினால் அல்லது பிரதான உணவு அதிகாரியினால் கோரப்படக்கூடியவாறான அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும் ;

(4) உணவுப்பொருள் எதனையும் உற்பத்திசெய்வதில், தயாரிப்பதில், பேணிக்காப்பதில், பொதியாக்குவதில், களஞ்சியப்படுத்துவதில், விநியோகிப்பதில் அல்லது விற்பதில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள், ஏதேனும் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய ஆள் மருத்துவத்தொழிலர், ஒருவரால் சோதனையிடப்படுவதற்குச் செய்வித்தலும் அத்துடன் அத்தகைய சோதனையின்மேல் அத்தகைய ஆள் அத்தகைய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளாரென மருத்துவத்தொழிலர் கண்டுபிடிப்பாராயின் அத்தகைய நோயிலிருந்து சுகப்படுத்தப்பட்டுவிட்டாரென மருத்துவத்தொழிலர் ஒருவரினால் சான்றுபடுத்தப்படும் வரையில் உணவுப்பொருள் எதனையும் உற்பத்தி செய்வதில், தயாரிப்பதில், பேணிக்காப்பதில், பொதியாகுவதில், களஞ்சியப்படுத்துவதில், விநியோகிப்பதில் அல்லது விற்பதில் ஈடுபடலாகாதென அத்தகைய ஆளைப் பணித்தலுக்கும்.

பாகம் II

**சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் மாதிரிகள் எடுத்தல் ; அத்துடன் உணவை இரசாயனப் பகுப்பாய்வு செய்தல் அல்லது சோதனை செய்தல்**

3. பின்வரும் ஒழுங்குவிதிகள் ஆனவை, நுணுக்க உயிரின வியல் சார்ந்த பகுப்பாய்வு முறையினால் அல்லாத, உணவு பற்றிய வேறு சோதனைக்கு அல்லது இரசாயனப் பகுப்பாய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(1) சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் மாதிரி ஒன்றை எடுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், மாதிரி எவ்வாளிடமிருந்து எடுக்கப்பட்டதோ அவ்வாளிடம், சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் இரசாயனப் பகுப்பாய்வுக்காக அல்லது சோதனைக்காக அத்தகைய மாதிரியை அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைக்கும் தமது எண்ணத்தை அறிவிப்புச்செய்தல் வேண்டும்.

(2) மாதிரி என்றவாறு பெறப்பட்ட அளவைப் பிரித்தலானது, இரசாயனப் பகுப்பாய்வு செய்தலை அல்லது சோதனை செய்தலை நடைமுறையில் முடியாததாக்காதென அல்லது இயலாததாக்காதென அதிகாரம்பெற்ற அலுவலரின் அபிப்பிராயத்தில் படுமாயின், அவர் -

(அ) மாதிரியை மூன்று பகுதிகளாகப் பிரித்தல் வேண்டும் ;

(ஆ) மூன்று பகுதிகளையும் சொந்தக்காரரின் பாகம், மாதிரி, இணைமாதிரி என இனங்காணவும் வேண்டும், உற்பத்தியாளரினால் உணவுப் பொருளின்மீது கட்டுத்துண்டு ஒட்டப்பட்டதான ஒரு பகுதி இருக்குமிடத்து, அத்தகைய பகுதியே "மாதிரி" என இனங்காணப்படுதலும் வேண்டும்.

(இ) மாதிரி எவரிடமிருந்து எடுக்கப்பட்டதோ அதன் சொந்தக்காரரை அல்லது ஆளை, மூன்று பகுதிகள் மீதும் அவரது இலச்சனையை ஒட்டுவதற்கு அல்லது விரலடையாளத்தை இடுவதற்குத் தேவைப்படுத்துதல் வேண்டும் ;

(ஈ) இலச்சினையை உடைக்காமல் அல்லது சேதப்படுத்தாமல் திறக்கமுடியாதபடியான அவ்விதத்தில் ஒவ்வொரு பகுதியையும் பத்திரப்படுத்துதல் வேண்டும்.

(உ) சொந்தக்காரரின் பாகம் என இனங்காணப்பட்ட பகுதியை, மாதிரி எவரிடமிருந்து எடுக்கப்பட்டதோ அப்பகுதியை, அதன் சொந்தக்காரரிடம் அல்லது ஆளிடம் ஒப்படைப்பதுடன், மாதிரி என இனங்காட்டப்பட்ட பகுதியை, இரசாயனப் பகுப்பாய்வுக்காக அல்லது சோதனைக்காக படிவம்-1 இல் 1 நிருபமொன்றுடன் சேர்த்து, அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஊ) இணை மாதிரி என இனங்காணப்பட்ட பகுதியை, அப்பகுதி எவரிடமிருந்து எடுக்கப்பட்டதோ அதன் சொந்தக்காரருக்கு எதிராக அல்லது ஆளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடுக்கப்படுமாயின், நீதி மன்றத்தில் காண்பிக்கப்படுதலுக்காகப் பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(3) மாதிரியை மூன்று பகுதிகளாகப் பிரித்தல், இரசாயனப் பகுப்பாய்வினை அல்லது சோதனையை நடைமுறையில் செய்ய முடியாததாக அல்லது இயலாததாக ஆக்கக்கூடுமென அதிகாரம்பெற்ற அலுவலர் அபிப்பிராயப்படுவாரெனின், அவர், இரசாயனப் பகுப்பாய்வுக்கென அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட வேண்டிய மாதிரி என்றவாறு முழு அளவையும் இனங்கண்டு, அதற்குப் பொருத்தமான கட்டுத்துண்டு இட்டு, எவரிடமிருந்து மாதிரி பெறப்பட்டதோ அந்தச் சொந்தக்காரரின் அல்லது ஆளின் இலச்சினையை மாதிரியின்மீது ஒட்டும்படி அல்லது அவரது ஒப்பத்தை அல்லது விரலடையாளத்தை இடும்படி தேவைப்படுத்தி, இலச்சனையை உடைக்காமல் அல்லது சேதப்படுத்தாமல் திறக்க முடியாதவிதத்தில் அதைப் பத்திரப்படுத்தி, 1 ஆம் படிவத்திலுள்ள நிருபத்துடன் சேர்த்து அதனை இரசாயனப் பகுப்பாய்வுக்கென அல்லது சோதனைக்கென அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்புதல் வேண்டும்.



(4) மூன்றாம் ஒழுங்குவிதியின் கீழ் இரசாயனப் பகுப்பாய்வுக்கென அல்லது சோதனைக்கென மாதிரியொன்று அனுப்பப்படுமிடத்து, அந்த மாதிரியைப் பிரித்தல் இரசாயனப்பகுப்பாய்வை அல்லது சோதனை செய்தலை நடைமுறையில் செய்யமுடியாததாக்காதென அல்லது இயலாததாக்காதென அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளர் அபிப்பிராயப்படுவாரெனின், அவர், மாதிரியை இரண்டு பாகங்களாகப் பிரித்து, உற்பத்தியாளரினால் மூலச் கட்டுத் துண்டு ஏதேனும் ஒட்டப்பட்டிருக்குமாயின் அதனைக் கொண்ட பாகத்துக்கு இலச்சினையை ஒட்டி, மற்றப் பாகத்தை இரசாயனப் பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்துவதுடன், இலச்சினையை ஒட்டிய பாகத்தை மூலச் கட்டுத் துண்டும் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையச் சேர்த்து, இயைபான உணவு அதிகாரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(5) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் எடுத்துச் செல்லப்படவேண்டிய மாதிரியின் அளவு ஆனது, சோதனை அல்லது இரசாயனப் பகுப்பாய்வு நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அளவினதாக இருத்தல் வேண்டும்.

(6) நியமப்படுத்தப்பட்ட, இசைவாக்கப்பட்ட, ஆடை அகற்றப்பட்ட அல்லது நறுமணமூட்டப்பட்ட பால் உட்பட பாலின், அல்லது வெண்ணெயின், குளிர்ந்த பாலாடையின், குளிர்ந்த கற்கண்டின் அல்லது தயிரின் மாதிரியை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவர், பேணற்பொருளாக சிறிதளவு "போமலின்" திரவத்தை அதில் சேர்க்கலாம் என்பதுடன், அவ்வாறு "போமலின்" திரவம் சேர்த்தலை, இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்படும் மாதிரியின் கட்டுத்துண்டுமீது சுட்டிக்காட்டலும் வேண்டும்.

(7) பிரிவு 24 (2) என்பதன்கீழ் இரசாயனப் பகுப்பாய்வுக்கென அல்லது சோதனைக்கென நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் மாதிரியொன்றை அனுப்புகின்ற எவரேனும் நீதிவான், இலச்சினைகள் உடைபடாமல் அதனைக் கடினமான கடதாசியினால் மீளவும் சுற்றி, அவரது சொந்த இலச்சினையை ஒட்டியபின்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

4. உணவின், நுணுக்க உயிரினவியல் சார்ந்த இரசாயனப் பகுப்பாய்வுக்குப் பின்வரும் ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகும் :-

(1) சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் மாதிரியொன்றை எடுத்துச் செல்லும் அதிகாரம்பெற்ற ஓர் அலுவலர், எவ்வாளிடமிருந்து மாதிரி பெறப்பட்டதோ அவ்வாளிடம், நுணுக்க உயிரினவியல் இரசாயனப் பகுப்பாய்வுக்காக அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அத்தகைய மாதிரி அனுப்பிவைக்கப்படவுள்ளதான எண்ணத்தை அறிவிப்புச் செய்தல் வேண்டும்.

(2) சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட மாதிரியானது இலச்சினையிடப்பட்ட கொள்கலன் ஒன்றைக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய கொள்கலன் திறக்கப்படாமலும் பழுதுபடாமலும் பொருத்தமாகப் பொறியிலிடப்பட்டும் அங்கீகரிப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(3) சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட மாதிரியானது, தொகையளவில் இருக்குமிடத்து அல்லது இலச்சினையிடப்பட்ட கொள்கலன் ஒன்றை தவிர்த்து, ஏதேனும் பொதியில் கொண்டிருக்குமிடத்து, நுண்மத்தீர்வான நிலைமையின்கீழ் மாதிரி எடுக்கப்பட்டு, நுண்மத்தீர்வு செய்யப்பட்ட கொதிகலன் ஒன்றுக்கு மாற்றப்பட்டு, இலச்சினையை உடைக்காமல் அல்லது சேதப்படுத்தாமல் அதனைத், திறக்கமுடியாத அத்தகைய விதத்தில் இலச்சினை இடப்படுதலும் வேண்டும்.

(4) அதிகாரம்பெற்ற அலுவலர், நுணுக்க உயிரினவியல் இரசாயனப் பகுப்பாய்வுக்கென எவரிடமிருந்து மாதிரி எடுக்கப்பட்டதோ அந்தச் சொந்தக்காரரை அல்லது ஆளை, அவ்வாறு எடுக்கப்பட்ட மாதிரியின்மீது அவரது இலச்சினையை ஒட்டும்படி அல்லது ஒப்பத்தை அல்லது விரலடையாளத்தை இடும்படி தேவைப்படுத்துதல் வேண்டும்.

(5) நுணுக்க உயிரினவியல் சார்ந்த இரசாயனப் பகுப்பாய்வுக்கென எடுக்கப்பட்ட ஏதேனும் மாதிரி, 1 ஆம் படிவத்திலுள்ள நிருபத்துடன் சேர்த்து அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் உடன் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(6) அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு மாதிரியை ஒப்படைப்பதற்கு எடுக்கப்படும் நேரம் இரண்டு மணித்தியாலங்களை விஞ்சக்கூடுமாயின் குளிரூட்டப்பட்ட நிலையிலேயே மாதிரி அனுப்பப்படல் வேண்டும்.

(7) நுணுக்க உயிரினவியல் சார்ந்த இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பப்படும் ஏதேனும் மாதிரியுடன் பேணற் பொருள் எதுவும் சேர்க்கப்படலாகாது.

பாகம் III

**உணவு இறக்குமதி**

5. இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பண்டம் ஒவ்வொன்றும், சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அந்த உணவுப் பண்டத்திற்கான கலவையின், தரத்தின் நியமங்களுக்கு இயைபானவையாக இருத்தல் வேண்டும்.

6. (1) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் உணவுப் பண்டத்தினை இரசாயனப் பகுப்பாய்வு செய்ததன்மேல், அல்லது சோதனை செய்ததன்மேல் இலங்கையில் அத்தகைய

உணவுப் பண்டத்தின் விற்பனை, சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளை மீறுவதாக இருக்குமென அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர் காண்பாராயின் அவர், இரசாயனப் பகுப்பாய்வின் அல்லது சோதனையின் கண்டுபிடிப்புகளை பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பிரதான சுங்கச் சேகரிப்பாளர், அத்தகைய உணவுப் பண்டம் இலங்கையில் விற்பனைக்காக சுங்கப் பகுதியினரால் விடுவிக்கப்படுதலைத் தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தலும் வேண்டும், இரசாயனப் பகுப்பாய்வுக்காக அல்லது சோதனைக்காக மாதிரியை அனுப்பும் அதிகாரம் பெற்ற அலுவலர், இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரதியொன்றை இறக்குமதியாளருக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) இராம் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட மீறுகையானது, உணவுப் பண்டமொன்றின் கட்டுத்துண்டு ஒட்டுதல் தொடர்பானதாக இருக்குமிடத்து, இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையில் அடங்கியுள்ள அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரின் விதப்புரைக்கிணங்க, அத்தகைய உணவுப் பண்டத்துக்கு மீளவும் கட்டுத்துண்டு ஒட்டப்படுவதன்பின்னர், இலங்கையில் நுகர்வுக்காக விடுவிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். ஏதேனும் உணவுப் பண்டத்துக்கு மீள கட்டுத்துண்டு ஒட்டும் வேளை அதிகாரம்பெற்ற அலுவலரின் மேற்பார்வையின் கீழ் கொண்டு நடத்தப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் உணவுப் பண்டத்துக்கு மீள கட்டுத்துண்டு ஒட்டும் வேளை, அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையில், குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் திருப்திகரமாகக் கொண்டு நடத்தப்படாதவிடத்து, அதிகாரம்பெற்ற அலுவலர் பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்; அவர் அத்தகைய உணவுப் பண்டம் இலங்கையில் விற்கப்படுவதற்காக விடுவிக்கப்படுதலைத் தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

## பகுதி IV

## பொருள்கோடல்

7. இவ்வொழுங்குவிதிகளில் –

"சட்டம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் எனப் பொருள்படும் ;

"உணவு" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"கட்டுத்துண்டு ஒட்டுதல்" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"மருத்துவத் தொழிலாளர்" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

அட்டவணை

படிவம் I

அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு/ அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு நிருபம்.

இல. : ________ .

இடம் : ________ .
திகதி : ________ .

அனுப்புதல் : ________ .
சேரல் : ________ .

(1) கீழே விவரணஞ் செய்யப்பட்டுள்ள மாதிரி ஆனது, சோதனைக்காக/இரசாயனப் பகுப்பாய்வுக்காக* 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ், இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது. சோதனைக்குப் பின்னர்/இரசாயனப் பகுப்பாய்வுக்குப் பின்னர்* இரசாயனப் பகுப்பாய்வு பற்றிய அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்படலாமென நான் வேண்டுகிறேன்.

(1) மாதிரியின் தன்மை :
(2) மாதிரியின் மீதுள்ள பிரித்தறியும் இலக்கம் :
(3) சேகரிப்புத் திகதியும் இடமும் :
(4) பேணிக்காக்கும் பொருள் ஏதேனும் சேர்க்கப்பட்டிருந்தால் அதன் தன்மையும் அளவும் :

(2) கையிருப்பின் முழு அளவும் (அளவைக் குறித்துரைக்குக) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 14(1) (அ) என்னும் பிரிவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. இரசாயனப் பகுப்பாராய்வின் அறிக்கையானது இடையான உணவு அதிகாரிக்கு விரைந்து அனுப்பப்படலாம்.

(3) மாதிரி ஆனது, 3(1) என்னும் ஒழுங்குவிதியின் கீழ் சேகரிக்கப்பட்டுள்ளது. எனவே இரசாயனப் பகுப்பாராய்வின் அறிக்கையுடன் மாதிரியின் ஒரு பாகமாவது, முறையாக இலச்சினையிடப்பட்டு, அத்துடன் உணவு மீதான மூல கட்டுத்துண்டினையும் சேர்த்து திருப்பியனுப்பப்படலாம்.

(4) மாதிரி ஆனது, நுண்மத்தீர்வு செய்யப்பட்ட சாதனத்தைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு, திருகல் மூடியுடையதான நுண்மத்தீர்வு செய்யப்பட்ட கொள்கலன்களில் வைக்கப்பட்டது.

சேகரிக்கப்பட்ட நேரம் :
ஒப்படைக்கப்பட்ட திகதி :

(5) அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்ட மாதிரி ஆனது, மூலக் கட்டுத்துண்டினைக் கொண்டுள்ளது எனவே, கொள்கலனானது இரசாயனப் பகுப்பாராய்வு அறிக்கையுடன் மூலக் கட்டுத்துண்டினையும் சேர்த்து திருப்பியனுப்பப்படலாம்.

(6) மாதிரியின் மீது ஒட்டப்பட்ட இலச்சினையின் அடையாள உருமாதிரி ஒன்றும் அனுப்பப்படுகிறது.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின்
ஒப்பம்.
(நிருவாக இடப்பரப்பு).

*பொருத்தமற்றவைகளைக் கீறிவிடுக.

6-477/1 - 07.06.85 ஆந் திகதிய வர்த்தமானி இல. 353.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.